கிட்டத்தட்ட 25 மூட்டைகள் கைப்பற்றப்பட்டு, பாதுகாப்பில் வைக்கப்பட்டன. சென்ற ஆண்டு இந்த கேள்வி கேட்கப்பட்டது. மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் அதற்கு பதில் அளிக்கின்ற நோத்தில் அங்கே தொழிற்சாலை அமைப்பது ஆய்வில் உள்ளது என்று சொன்னார்கள். இந்த ஆண்டாவது அந்தத் தொழிற்சாலையை ஆரம்பிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, நான் எற்கனவே சொன்னேன். மாநில புவியியல் பிரிவு இது சம்பந்தமாக ஆய்வு மேற்கொண்டுள்ளது. அதனுடைய முடிவு தெரிந்ததற்குப் பின்னாலே இதுகுறித்து முடிவுகள் மேற்கொள்ளப்படும்.

குமரி மாவட்டத்தில் கிடைக்கும் இரத்தினக்கற்கள்.

*** வினா எண் 417.—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் :** மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டத்தில் ஒருவிதமான இரத்தினக் கற்கள் கிடைப்பதாக அரசுக்கு அறிக்கைகள் கிடைத்துள்ளதென்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், இது பற்றிய விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) ஆம்.

(ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் கல்குளம் மற்றும் தோவலா வட்டங்களில் கிரைசோபெரில் எனப்படும் ஒருவகை மணிக்கல் (வைடூரியம்) கிடைப்பது கண்டறியப்பட்டுள்ளது. இவைகள் ஒரு குறிப்பிட்ட பகுதிக்குள் அமைந்தில்லாமல், சிதறிய நிலையில் அமைந்துள்ளன. இவை பிற கனிமங்களைப் போல வடிவமும் ஆழ அமைப்பும் இல்லாததால் இவற்றின் இருப்பு அளவை கணக்கிட இயலவில்லை.

(முற்பகல் 10-00)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவையின் முன் அனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. மி. வின்சென்ட் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, வைரம் விளையும் மாவட்டம் குமரி மாவட்டம். தமிழ் தாய்க்கு வைரக் கற்களை தானம் செய்யும் குமரிக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் செயற்கை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

வைரங்களையே வைத்து உலக வியாபாரிகளைக் கவரும் ஜப்பானைப்போல இயற்கை வைரத் தொழிற்சாலையையும் வியாபார ஸ்தலத்தையும் குமரியில் நிறுவ அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவரவர்களே, நான் ஏற்கெனவே குறிப்பிட்டேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடு வதைப்போல் அந்த பகுதிகளிலே வைடூரிய கற்கள் பரவலாக கிடைப்பதால், எவ்வளவு இருக்கிறது என்ற ஒரு கணக்கு தற்போது அரசிடம் இல்லை. மாநில புவியியல் பிரிவு ஆய்வு செய்து, இலாபகரமாக இருக்குமானால் ஒரு தொழில் கூடம் அல்லது விற்பனை நிலையத்தை ஏற்படுத்த வாய்ப்பு இருந்தால் அதற்குப் பின்னால் இதுபற்றி அரசு பரிசீலிக்கும்.

திரு. டி. மணி : தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் தடிக்காரன்கோணத்திற்கு வடபுறம், பால்குளம் அருகேயும் மகேந்திரகிரி தோட்டத்திற்கு அருகேயும் இந்த இரத்தின கற்கள் ஏராளமாக கிடைக்கின்றன. 1976-லே அவை எடுக்கப்பட்டதாகவும் சொல்லப்படுகிறது. இந்தக் கனிவளத்தை எடுக்கின்ற அதிகாரம் மாநில சர்க்கார் பொறுப்பில் இருக்கிறதா அல்லது மத்திய சர்க்கார் பொறுப்பில் இருக்கிறதா? அந்தப் பகுதிகளில் இருக்கிற இரத்தின கற்களை முழுமையாகக் கண்டறிய ஒரு ஆய்வு நடத்தி, வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய தமிழக அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவரவர்களே, அந்த மாவட்டத்தில் பரவலாக வைடூரிய கற்கள் கிடைக்கின்றன என்று நான் ஏற்கெனவே சொன்னேன். தமிழ்நாடு புவியியல் பிரிவினர் சார்பிலே ஒரு விரிவான ஆய்வு அந்தப் பகுதியில் நடத்தப்பட்டு, அதற்கான நடவடிக்கைகை மேற்கொள்ளப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

வெல்லம்பட்டி, அச்சனம்பட்டி கிராம ஆதிதிராவிட மக்களுக்கு வீட்டு மனைப்பட்டா வழங்கும் திட்டம்.

*** வினா எண் 418.—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் :** மாண்புமிகு ஆதி திராவிட நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வேடசந்தூர் தாலுகா, வெல்லம்பட்டி கிராமம் வெல்லம்பட்டி, அச்சனம்பட்டி ஆகிய ஊர்களில் ஆதிதிராவிட மக்களுக்கு வீட்டு மனைக்குரிய இடங்களை ஆர்ஜிதம் செய்து அளிப்பதில் காலதாமதம் ஆவதன் காரணம் என்ன ?